வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 8 /2022

வழக்கு சாட்சி LW1/ PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஐயாதுரை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 47 |

தேதி 09.07.2025
எதிரி ஆஜர்.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்து மறுநாள் தான் புகார் அளித்தேன் என்றால் சம்பவம் நடந்தவுடன் காவல் நிலையம் சென்றேன். அவர்கள் என்னை மருத்துவமனை போகச் சொன்னார்கள். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னிடம் புகாரினை வந்து பெற்றுச் சென்றார்கள். புகாரினை நான் எழுதவில்லை என்றால் எனது மகள் எழுதினாள். நான் கையொப்பம் செய்தேன். புகாரில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு தெரியும். நான் 10 ஆண்டுகளாக பொன்னியம்மன்மேட்டில் ஒரே கடையில் வேலைப் பார்க்கிறேன் என்றால் ஆமாம். அந்த பகுதியில் உள்ள நபர்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வேலை முடிந்தவுடன் நான் மது அருந்திவிட்டு செல்வேன் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த்து மாலை 4.30 மணி இருக்கும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் என்றால் தெரியும். இருவரும் ஒன்றாக மது அருந்துவோம் என்றால் இல்லை. முன்விரோதம் காரணமாக நானாக மது போதையில் விழுந்த்தினை எதிரி அடித்த்தாக பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது நான் மது போதையில் இருந்தேன்

என்றால் ஆமாம். சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரி மீது ஏற்கனவே வழக்கு உள்ளதாலும் போலீஸ் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.